சுந்தரர்	-	ஆரூர்
காளங்கி	-	திருக்கடையூர், திருப்பனந்தாள்
வால்மீகர்,		
அகப்பேய்ச்சித்தர்	-	எட்டுக்குடி, திருவையாறு
போகநாதர்	-	பழனி, கதிர்காமம், திருச்செந்தூர், தணிகை பரங்குன்றம்.

இவ்வகைகள் போகர் ஐந்நூறில் கூறப்பட்டிருக்கின்றன.

போமடா வெளியோடு வெளிதான் சேரும்!
புதுமையடா வாயுவோட வாயு சேரும்;
ஊமடா தீயொடு தீதான் சேரும்;
உத்தமனே அப்புடனே அப்பு சேரும்;
ஆமடா மண்ணுடனே மண்தான் சேரும்;
அவரவர்க ளினத்தோடே அவர்கள் சேர்ந்து
தாமடா தன்னிலையி லறிவை யூக்கிச்
சதானந்த பூரணமா யிருந்து வாழே

இருந்தறிவு சுழுமுனையில் புக்க தானால்
ஏகாந்த மானதொரு லிங்க மாகும்;
அருந்தவஞ்சேர் அவ்வறிவு ரவியில் சேர்ந்தால்
அரகரா சத்திமய மான தெய்வம்
புரிந்தறிவு மதிதனிலே சேர்ந்து நின்றால்
புத்தியில்லாப் பிறவியிலே புகுவான் பாரு
வருந்திமனக் கனிவாலே குருவைக் காத்து
மதிகதிரில் நின்றகுறி வணங்கிப் பாரே.

கால அமைப்பும் உடலமைப்பும் இயக்கமும் பற்றிய சில சித்தர்கள் செய்திகள்

60 நாழிடிைக கொண்டது ஒரு நாள். நாழிகை ஒன்றுக்கு சுவாசம் 360 60 நாழிகைக்குச் சுவாசம் 21600.

நாள் ஒன்றுக்கு 2 லட்சத்து பதினாயிரம் நொடி; நொடி 60 கொண்டது ஒரு விநாடி; 60 விநாடி கொண்டது ஒரு நாழிகை நாழிகை; 60 கொண்டது ஒரு நாள். 360 நாள் கொண்டது ஒரு வருடம்; 21600ஐ, 80ஆல் பெருக்கக் கிரேதா யுகமாம்; 60 ஆல் பெருக்கத் திரேதா யுகமாம்; 40 ஆல் பெருக்கத் துவாபர யுகமாம் 20 ஆல் பெருக்கக் கலியுக மொத்த ஆண்டாகும்.

யுகந்தோறும் மகான்கள் பெற்ற தபோபலத்தால் அரசு சிருஷ்டி யாதிகள் நடத்தி வருவதாகக் கூறியிருக்கின்றனர்.

சித்தர் உரைத்த உடல் பாதுகாப்பு முறைகள்

அடியிற்காணும் ஔஷதங்களை உபயோகப்படுத்தும்போது அறுசுவை, புகையிலை, அபினி, கள், சாராயம், பெண்போகம், மச்ச மாமிசங்கள், கோபம், அதிக நித்திரை நீக்கவும்.

1. மேகநீர் நீங்கிச் சுத்த உதிரம் பெருக

பாலில் வேகவைத்த நெல்லிக்காய்ச் சூரணம் சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகத்தூள் சமனெடையாகக் கூட்டி $^1/_2$ விராக னெடை தேனில் குழைத்து, நாளைக்கு ஒருவேளையாக ஒரு மண்டலம் கொள்ளவும்.

2. மலக்குற்றம் நீங்க

கடுக்காய் 4, திப்பிலி 1, சுக்கு 1, சீரகம் 1, ஓமம் 1, திப்பிலி மூலம் 1, இந்துப்பு 1, சூரணங்கள் தனித்தனி செய்து, மேலே கண்ட எடைகளாகக் கூட்டிக் கடிகைச் சூரணம் வெந்நீரில் கொள்ளவும்.

3. அய்யச்சீதம் கழல

வெள்ளைக் காக்கணவேர், கடுக்காய், நெல்லி வற்றல் ஒவ்வொன்றும் புன்னைக்காயளவு, 4 பலம் சிற்றாமணக்கு நெய்யில் கலந்து காலையாக 3 நாள் உள்ளுக்குக் கொள்ளவும்.

4. தேகத்திலிருக்கும் சுண்ணாம்பு நீங்க

பச்சை மஞ்சள் சமூலம் 8 - 1 ஆகக் கியாழம் வடித்து, நல்லெண்ணெய் பலம் 3 விட்டு, இவ்விதம் 3 நாள் கொள்ளவும்.

5. தேகத்தில் எண்ணெய் நீங்க

விதை நீக்கிய சீக்காய்த்தூள், இலுப்பையிலை, தாளியிலை வகைக்குப் பிடி ஒன்று. இவைகள் அமுரியில் கியாழம் 8-1 ஆக வடித்து, பூநீர் கழஞ்சு அரையும், படிகாரச் சுன்னம் கழஞ்சு அரையும் கூட்டிக் கொள்க. இவ்விதம் 3 நாள் கொள்ளவும்.

6. வாய்வு நீங்க

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், இந்துப்பு, கறிவேப்பிலைச் சூரணம் வகைக்குப் பலம் ஒன்று. பொரித்த காயம் பசும்பால் கூட்டிக் கடிகைப் பிரமாணம் அன்னத்திலிட்டுப் புசிக்கவும்.

7. தாகம், மயக்கம், சூடு, மூர்ச்சைக்கு

தாளிசபத்திரி, சுக்கு, சீரகம் வகைக்குப் பலம் ஒன்றாகக் கியாழம் வடித்துக் கொள்வதாலும், அதிமதுரம், சிறுதேக்கு, பனங்கற்கண்டு கியாழம் வடித்துக் கொள்வதாலும் நீங்கும்.

8. மேகவெட்டை, மூலச்சூடு, காந்தல், பித்தவெறி, காலப்பித்தம் தீர.

சுத்தி செய்த சீந்திற் கொடிச் சூரணம், கற்கண்டு கூட்டிக் கடிகைப் பிரமாணம் தேனில் ஒரு மண்டலம் கொள்வதாலும், கரந்தைச் சூரணம் 4, சீனி 1 கூட்டிக் கடிகைப் பிரமாணம் 10 நாள் கொள்வதாலும் நீங்கும்.

9. மேகநீரால் சருமத்தில் காணும் வியாதிக்கு

கீழாநெல்லிச் சமூல சூரணம், சீனி, நெய், தேன் கூட்டிப் பாகப் படுத்தித் தான்றிக்காய்ப் பிரமாணம் 6 மாதம் அல்லது ஒரு வருடம் உட்கொண்டு வரக் குட்ட வியாதியும் தீரும்.

10. கண் துலக்கமாய் நரை வராதிருக்க

காக்கணம், மேனி, கரந்தை, வல்லாரை, அவுரி, பொற்றலை, பொடுதலைப் பிரமாணம் தேனில் ஒரு மண்டலம் கொள்க.

11. மந்தபுத்தி, மதிமயக்கம், சோகை, எரிபித்தம், நீர்க்கட்டு, மலபந்தம், பித்தமூர்ச்சை நீங்க

மேனி, சிறுசெருப்படை, கரிசலை சமனெடைச் சூரணம் கூட்டி, இவைகளுக்கு 4 க்கு 1 கற்கண்டு கூட்டி ஒரு மண்டலம் கொள்க.

12. உதிரத்தில் தேகநீர் நீங்க

திரிகடுகமும் ஓமமும் வறுத்துத் தூளாக்கிப் பனைவெல்லப் பாகில் கிளறி, உதயத்தில் கழற்சிக்காய்ப் பிரமாணம் உட்கொண்டு வரவும்.

கருங்குருவைப் பச்சமுதும் சிறுபயறுகள் கூட்டிப் பொங்கி, சர்க்கரை தேன் ஆவின்பால் முப்பழங் கூட்டி உண்பதும், மேல் கண்ட அமுதும் பசுப்பாலும் கூட்டிப் பொங்கி, தேங்காய்த் துருவலும் சர்க்கரையுங் கூட்டி உண்பதும், முன்னமுதும் துவரைப் பருப்பும் பொங்கித் தேங்காய்த் துருவல் சர்க்கரை நெய் கூட்டி உண்பதும், அமுது பொங்கி, ஏலரிசித் தூளும் சர்க்கரையும் கூட்டி உண்பதுண்டு. அமுது, சீரகம், சர்க்கரை கூடி உண்ணப் பித்த மயக்கந் தீரும்.

கிராம்புக் கியாழத்தில் அமுதிட்டுப் பொங்கி, சர்க்கரை கூட்டி உண்டு வர மூல வியாதி தீரும்.

பருத்தி கொட்டையின் பாலையெடுத்து அமுதிட்டு பொங்கிச் சர்க்கரை தேன் கூட்டி உண்டு வர, மேகம் நீங்கித் தாதுக்கள் வலுப்படும்.

பழைய கம்பு அல்லது தினையைப் பசுவின்பாலில் பொங்கிச் சர்க்கரை கூட்டி உண்டு வர, தசையிலுள்ள பித்த நீர்கள் நீங்கி குளிர்ச்சியாகும்.

அமுதும் பயறும் ஆவின்பாலும் பொங்கிக் கருவேப்பிலை, மிளகு, சூரணம், அமுரி உப்புக் கூட்டி உண்பதுமுண்டு.

இதில் கண்டவைகளில் தனது சரீரத்தன்மைக்கு ஒற்றுமையானதாகப் பாகப்படுத்திக் கொள்க.

ஆகாரம்

உச்சிக்கால போஜனம் செய்து இரவில் ஆவின்பாலை உட்கொண்டு தமது சாதனத்தில் இடைவிடாமலிருப்பவர்கள். சத்துவ குணமுடையவர்களாவார்களென்று கர்ப்ப நூலில் அனுபவிகள் கண்டிருக்கின்றார்கள்.

கண்டத்தில் கபம் காலனாயிருப்பதால், ஆவின் நெய்யுடன் பொற்றலை ரசம் சமனாகக் கூட்டி ரவியில் வைத்துச் சுண்டிய பிறகு உதயத்தில் பெருவிரலில் கொஞ்சமெடுத்து உண்ணாவில்தேய்த்துவரக் கபங்கள் நீங்கும்.

கபாலக் கொதிப்பும் நேந்திர எரிவும் சூட்டினாயிருந்தால்

ஆவின்பால் படி 3, பொன்னாங்காணி ரசம் படி கூட்டிக் காய்ச்சி இறக்கிக் கீழ்வைத்து ஆறிய பிறகு பிரைமோர்விட்டு மறுநாள் மத்திட்டுக் கடைந்து வெண்ணெயெடுத்து உருக்கி நெய்யாக வடித்து வைத்துக் கொண்டு, பக்ஷத்திற்கொரு தரம் சிரவில் தேய்த்து ஸ்நானஞ் செய்து வரக் குணமாகும்.

பஞ்ச கர்ப்ப ஸ்நாணம்

நெல்லிப்பருப்பு, வேப்பம்பருப்பு, மிளகு, கற்தூரி மஞ்சள், கடுக்காய் இவ்வைந்தும் பசுப்பாலிலரைத்து, சற்றுக் கொதிப்பித்து, சிரத்தில் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர வேண்டும்.

சிலர் அம்பாள் பூசை செய்வதாக மது மாமிசாதிகளைபடைத்து, அவற்றைத் தாங்களுண்டு சுபாவ குணத்தையும் போக்கிப் போதை மயக்கத்தில் ஆழ்வர்.

'மதுவுண்ட நாங்களெல்லாம் ஞானிகளானோம்? ஆத்தாளுக்கென் செய்யும் கள்ளும் சுள்ளும்?' என்று தவ சிகாமணிகள் கூறியிருக்கின்றார்கள்.

முக்கா லுணர்வன்றி யெத்தேசி கட்கு முழுவுணவில்
அக்கா ரணமன்ன சாகாதி கூடி யரையதிர்பால்
சிக்கா அவமுதம் புகக்கிரங் காலுண்டிச் சேடம்வெளி
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் வளியுமன்றே?

உண்ட மறுநாள் திப்பி நீங்கி அன்னரசமாம்; 3 ஆம் நாள் உதிரமாகும்; 4 ஆம் நாள் மாமிசமாகும்; 5-6 ஆம் நாள் மேதையாகும்; 7-8 ஆம் நாள் மசக்கையாகும்; இதற்குமேல் இந்திரியமாகுமென வைத்திய நூலில் கண்டிருந்தாலும், ஐரோப்பிய பண்டிதர் கிரமமாகக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க உண்மை தெரிய வரும்.

கைந்நாடித் துடிப்பு

3 துடித்தால், 2 தரம் சுவாசம் நடக்கும். குழந்தைகளுக்கு நாடி 120 துடித்தால், சுவாசம் 314 நடக்கும். இதில் பேதமாக நடக்கில் நுரையீரலிலும் இரத்தாசயத்திலும் வியாதியாகும்.

நாடித் துடிப்புக்கு காரணம்

இரத்தாசயத்திலிருந்து ரத்த நரம்புகள் வழியாய் உதிரம் ஓடி வரும்போது உண்டாகும் அதிர்ச்சியே நாடியெனக் கூறப்படும். துருத்தி விரிந்து குவிதல்போல, இரத்தாசயப்பை விரிந்து நுரையீரலிலிருந்து சுத்தமான இரத்தத்தை யுட்கொண்டு, திடீரெனச் சுருங்குவதன்றோ, அதனுள்ளிருக்கும் இரத்தம் விரைவாக இரத்த நரம்புகள் வழியாய்ச் சென்று, தேகமெங்கும் வியாபிக்கும்.

சரீர உள்ளுறுப்புகளின் விவரத்தை ஆயுர்வேதச் சுருக்கம் என்னும் வைத்திய கிரந்தத்தில் விரிவாய்க் காணலாகும்.

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரயோக முந்தரும்;
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே.

மனத்தி லெழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை யிச்சித்துப் போகின்ற வாறே.

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா;
உடல்கழன்றால் வேட முடனே கழலும்;
உடலுயி ருண்மையென் றோர்ந்துகொள் ளாதார்
கடலி லகப்பட்ட கட்டையொத் தாரே.

தொழிலறி வாளர் கருதிகண் ணாகப்
பழுத றியாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாளர்;
அழிவறி வார்மற்றை யல்லா தவரே.

இனி இந்த நூலில் ஞானப்பயிற்சி மாணவருக்கு என்று சில மேற்கோட்பாடல்கள் தரப்பட்டுள்ளன. அவை:-

புலஸ்தியர் 100

காணுமூச் சடக்கி விழியது முருட்டிக்
கபாலமுந் திறந்தனர் கோடி;
கனத்தவராய் வதனால் குன்மநோய் அணுகிக்
கலங்கினோ ரவரொரு கோடி;
தோணுமெய் மறந்து சுழன்றுட னெழும்பிச்
சொக்கினோ ரவரொரு கோடி;
சூலைவாய் வணுகிச் சுவாலையு மெழுப்பிச்
சுரமதா லிறந்தனர் கோடி;

ஊணுவுண் ணாக்கண் ணாக்கையுள் தூக்கி
யுள்ளடங் கினர்களுங் கோடி;
உயரசா ணீள முழுவது மெழும்பி
ஓங்கியே ஒடுங்கினோர் கோடி;
பேணதி காரப் பேதிவந் தணுகிப்
பிறவியு மிழந்தனர் கோடி;
பெருமையாய்க் கர்ப்ப சாதனை யறியாப்
பிராணனு மழிந்து மாண் டனரே!

இனமறி யாம லிருத்தியே வாய்வை
இறந்தன ரவவொரு கோடி;
இனியதம் பனஞ்செய் தெழும்பியே கும்பித்
தேங்கினோ ரவவொரு கோடி;
கனமறி யாமல் கரத்தைவா யுவினால்
கருதியே யிறந்தனர் கோடி;
கண்டுவா சியினி லொன்றைவிட் டொன்று
கலங்கியே மடிந்தனர் கோடி;
தினமொரு நாழி வாசிகொண் டிழுத்துச்
சிவபுர மேகினார் கோடி;
தெளிந்திடு கண்மூக் கெனுமதைப் போற்றிச்
சிறந்தன ரவரொரு கோடி;

தனபெரு விரலா லண்ணாக்கை யேற்றித்
தயங்கின ரவரொரு கோடி
சலமதில் மூழ்கிச் சாதனை யதீதச்
சாக்காடுவந் தெய்தினோ ரறிந்தே.

அறிவதிவ் வாறின் கருத்தினை யம்ம
அவனியின் மாந்தருட் சிலபேர்
அம்புவி தனிலே மறையவுங் குழிசெய்
ததனிலும் பதுங்கினோர் கோடி;
சரிந்திடு கதலி வாழையின் குலைபோல்
தத்தளித் தனவவை போலும்;
தயங்கின ரனேகர் சாகர மதனில்
தாம்விழுந் தலைவது போலும்;
தரணியிற் சிலபேர் தாமரை யிலைதண்
ணீரெனத் தவித்தன ரப்பா!
பாருல கதீதம் தேடியும் குருவின்
பதமடை யாமலு மாண்டார்;

தெரிந்துமிப் பரிசே யுத்தம ரனேகர்
தெளிந்தவ ரறிந்துமே செப்பச்
சீறிடும் வாசி யோகத்தின் பெருமை
திருத்தமா யுரைத்திட லாமே.

வாசியோ கத்தன் மகத்துவ முரைக்க
வருக்கரே சகத்தின திறப்பை
மாத்திரை முப்பத் திரண்டுமே வளமாய்
மாறவு மதனைநீ ரையா
வீசுப் ரகத்தில் அறுபத்து நாலு
விளங்கியே மாறிமா றிடவும்
விகற்பம்வந் தணுகா வாசிநின் றுலவு
மேகுறி திறவுகோ லறிதல்
பாசம்வந் தணுகா கும்பக மதில்பதி
னாறென அறிந்துமே தீரு:
பழக்கமி தாகு மகத்துக ளுரைக்கும்
பரிபூர ணானந்த தீட்சை
பூசித மாகும் வாசிதான் வசியம்
பொருந்திடுங் கால்தலை மாறி:
புனல்சொரிந் திடவும் சுழியது நாடிப்
புகலவும் சூட்சமி தாமே.

நாடிடு மினிகேள் மாராச யோகம்
நாட்டுவேன் வயிராக்ய ஞானம்:
நடத்தையென் றறிய வாசியோ கத்தின்
நற்கறி விளக்கவும் நடத்தைத்
தேடுபூ ரகத்தில் முப்பத் திரண்டு
சிவசிவா ரேசகம் பதினாறு
தெளிந்தகும் பகத்தில் அறுபத்து நாலு
திருத்தமாய்த் தீருமிவ் விதமாய்க்
கோடுகப் பாமல் சுழுமுனை மேவிக்
குறித்திரு கண்ணதின் கூறு
கும்பியும் வாசி யொளியது வீசும்
குறிப்பதா மொளியெனில் கூடக்
கூடுமே யிதுதான் மாராச யோகங்
கொண்டுமாத் திரைக்கொரு தீட்சை
கோருமே யிதுபார் தலைசுற்றி நொடிக்கக்
குறித்தொன்று மாச்சுதிவ் வாறே!

திருமூலர் 3000

ஏறுதல் பூரக மீரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பக மறுப்பது நாலதில்
ஊறுதல் முப்பத்தி ரண்டதி ரேசகம்
மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே.

வளியினை வாங்கி வயத்த லடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் றிருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியினு மாமே.

எங்கே யிருக்கினும் பூரி யிடத்திலே
அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை;
அங்கே பிடித்தது விட்டன வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே.

மேல்கீழ் நடுப்பக மிக்குறப் பூரித்துப்
பாலா மிரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலால முண்டா னருள்பெற லாமே.

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே.
ஏமுற்ற முப்பத் திரண்டு மிரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்
டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க வுண்மையே.

இட்டதவ் வீடிள காதிரே சித்துப்
புட்டிப் படித்தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அப்பானனுங் கும்பித்து
நட்ட மிருக்க நமனில்லை தானே

அண்டங்க ளேழு மகண்டமு மாவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைபளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே.

பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உண்ணின்ற சோதி யொருவர்க் கறியொண்ணாக்
கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை யாய்ந்தது மூப்பே.

3. நெஞ்சிற் விளக்கம்.

கணபதி தாசர் என்ற சித்தர் வழங்கியதாக சில பழைய தொகுப்புகளிலே ஒரு சித்தர் இலக்கியம் காணப்பெறுகிறது. அது முழுவதும் செய்யுளால் இயன்றது. ஏற்கனவே நாம் ஆராய்ந்த சித்தர் இலக்கிய ஞான இரகசியங்களை இந்தப் பனுவல் தொகுத்துக் கூறுகிறது. யாப்பெழிலும் கவிநயமும் இலக்கியத்தோடு மிளிர்கிறது இந்த நூல். அது வருமாறு;

விநாயகர் காப்பு

வஞ்சக மனத்தி னாசை மாற்றிய பெரியோர் தாளில்
கஞ்சமா மலரிட் டோதுங் கணபதி தாசன் அன்பால்
நெஞ்சறி விளக்க ஞான நீதிநூல் நூறும் பாடக்
குஞ்சர முகத்து மூலக் குருபரன் காப்ப தாமே.

நூல்

பூமியிற் சவுந்த ரப்பெண் புணர்ந்திடு நாகை நாதர்
நாமமெந் நாளும் நாவி னவின்றுசெந் தமிழாற் பாடிக்
காமமு மாசா பாசக் கன்மமு மகற்றி மூல
ஓமெனு மெழுத்தைந் தாலேயுனையறிந் துணர்வாய் நெஞ்சே!

தந்தைதாய் நிசமு மல்ல; சனங்களு நிசமு மல்ல;
மைந்தரும் நிசமு மல்ல; மனைவியும் நிசமு மல்ல;
இந்தமெய் நிசமு மல்ல; இல்லறம் நிசமு மல்ல;
சுந்தர நாகை நாதர் துணையடி நிசம்பார் நெஞ்சே;

காண்பது மழிந்து போகும்; காயமு மழிந்து போகும்;
ஊண்பொருள் அழிந்து போகும்; உலகமும் அழிந்து போகும்;
பூண்பணி நாகை நாதர் பொற்பதம் அழியா தென்று
வீண்பொழு தினைப்போக் காமல் வெளிதனில் ஒளிபார் நெஞ்சே;

மனமெனும் பேயி னாலே மாய்கையாம் இருடான் மூடச்
சனமெனும் ஆசா பாசந் தலைமிசை ஏற்றிக் கொண்டு
கனமெனுஞ் சுமையைத் தூக்கிக் கவலையுற் றிட்டாய் நீயுற்
பனமெனும் நாகை நாதர் பதம்பணிந் தருள்சேர் நெஞ்சே!

இருவினைப் பகுதி யாலே எடுத்திந்தத் தேகந் தன்னை
மருவி நானான் என்று மாயையில் அழிந்தாய் நீதான்;
குருவினாற் குறியைப் பார்த்துக் குண்டலி வழியே சென்றங்கு

உருவினால் நாகை நாதர் உண்மையை உணர்வாய் நெஞ்சே!
வானதில் இரவி யுன்றன் வயதெலாங் கொடுபோ கின்றான்;
தானதை யறிந்தி டாமல் தரணியி லிருப்போ மென்றே
ஊனமாம் உடலை நம்பி உண்மைகெட் டலைந்தாய்
நீ மெய்ஞ்

ஞானமே பொருளாய் நாகை நாதரைத் தொழுவாய்
நெஞ்சே!
எட்டுடன் இரண்டு மாகி இருந்ததோர் எழுத்தைக் காணார்;
விட்டதோர் குறையும் காணார் விதியின்றன் விவரங் காணார்;
தொட்டதோர் குறியுங் காணார்; சோதிமெய்ப் பொருளுங்
காணார்!

கிட்டுமோ நாகை நாதர் கிருபைதா னுரைப்பாய் நெஞ்சே!
வஞ்சக நடைம ரத்தில் வளர்வினைக் கொம்பி லேறிச்
சஞ்சல மனக்கு ரங்கு தாவியே அலைய நீதான்
பஞ்சபா தகங்கள் செய்து பாம்பின் வாய்த் தேரை
யானாய்;

நஞ்சமு தருந்து நாகை நாதரை வணங்கு நெஞ்சே!
உடலினை நிசமென் றெண்ணி உலகெல்லாம் ஓடி யாடிக்
கடல்மரக் கலப்பாய்க் கம்பக் காகம்போற் கலக்க
முற்றாய்;

திடமருள் குருவின் பாதஞ் சிக்கெனப் பிடித்து நின்றால்
நடமிடு நாகை நாதர் நற்பதம் பணிவாய் நெஞ்சே!
வீட்டிருள் போக வென்றே விளக்கினை ஏற்றி வைத்தால்,
வீட்டிருள் எங்கே போச்சு; விளக்கொளி எங்கே போச்சு?
கூட்டினில் நடஞ்செய் ஈசன் குறிப்பறி யாமல் நீதான்
நாட்டினில் அலைந்தாய் நாகை நாதரை வணங்கு நெஞ்சே!

காட்டினில் மேவு கின்ற கனபுழு வெல்லாம் பார்த்து
வேட்டுவ னெடுத்து வந்து விரும்பியக் கிருமி தன்னைக்
கூட்டிலே அடைத்தும் அந்தக் குளவிதன் உருவாய்ச்
செய்யும்
நாட்டினில் நீதா னாகை நாதரை வணங்கு நெஞ்சே!

குளத்திலே கிடக்கும் ஆமை குளக்கரை முட்டை யிட்டுக்
குளத்துநீர்க் குள்ளி ருந்து குறிப்புடன் நினைக்கும் போது
குளத்திலே புதைத்த முட்டை கருவுரு வானாற் போலுன்
உளத்திலே நாகை நாதர் உருவறிந் துணர்வாய் நெஞ்சே!

மருவிய சிலந்திப் பூச்சி வயிற்றினில் நூலண் டாக்கி
உருவுடன் கூடு கட்டி உகந்ததி லிருக்கு மாபோல்
குருபர னுனது கூட்டில் குடியிருப் பதனைப் பார்த்துப்
பெருவெளி நாகை நாதர் பெருமைகண் டருள்சேர் நெஞ்சே!

வாரணம் முட்டையிட்டு வயிற்றில்வைத் தணைத்துக் கொண்டு
பூரணக் கூடுண் டாக்கிப் பொரித்திடுங் குஞ்சு போலக்
காரணக் குருவை மூலக் கனல்விளக் கதனாற் கண்டு
நாரணன் அறியா நாகை நாதரைப் பணிவாய் நெஞ்சே!

புல்லினுள் இருக்கும் பூச்சி பொருந்தவெண் ணுரையுண் டாக்கி
மெல்லிய தண்ணீர் வீட்டில் வெயில்படா திருக்கு மாபோல்
சொல்லிலே நாகை நாதர் தோய்ந்திடாச் சூட்சங் கண்டாற்
கல்லிலே தெய்வ மில்லை கருத்திலே தெய்வம் நெஞ்சே!

தண்ணீரி லிருக்கும் மீன்கள் தண்ணீரிற் கருவைப் பித்திக்
கண்ணினாற் பார்க்கும் போது கயலுறு வானாற் போல
நண்ணிய குருவைக் கண்டு நாதனல் லுருவைச் சேர்த்து
விண்ணின்மேல் நாகை நாதர் மெல்லடி வெளிபார் நெஞ்சே!

இலகிய ஊசிக் காந்தம் இரும்பினை இழுப்ப தேபோல்
உலவிய குரு பரன்றாள் உன்னையாட் கொண்ட தம்மை
நலமுடன் அறிந்த நீதான் நாயனை யறிந்தி டாமல்
நிலமிசை யலைந்தாய் நாத லிங்கரை நினைப்பாய் நெஞ்சே!

சூரிய காந்தம் பஞ்சைச் சுட்டிடுஞ் சுடரே போலக்
கூரிய அடிமூ லத்தின் குண்டலிக் கனலை மூட்டி
வீரிய விருந்து ணாத வெளிவீடு தன்னிற் சென்றே
ஆரிய நாகை நாதர் அடியிணை தொழுவாய் நெஞ்சே!

ஐவகைப் பூதந் தொண்ணூற் றாறுதத் துவங்க ளாட்டும்
தெய்வமுன் னிடத்தி ருக்கத் தேசத்தில் அலைந்தாய் நீதான்;
பொய்வசத் தேக பந்தம் போக்கிமெய்ப் பொருளை நோக்கி
ஐவரோ ரிடத்திற் கூடும் ஆனந்தம் அறிவாய் நெஞ்சே!

ஊனமாம் உடலம் பொய்யென் றுணர்ந்துமெய் யறிவைக் கண்டு
தானவ னான போதே சற்குரு பதத்தைச் சேர்ந்தாய்
வானதி லிரவி திங்கள் வந்துபோ வதைக் கண்டால்
ஞானவான் நாகை நாதர் நடனமுங் காண்பாய் நெஞ்சே!

கிட்டுமோ ஞான யோகம்? கிடைக்குமோ குருவின் பாதம்?
கட்டுமோ மூல வாசி? காணுமோ கயிலை வீடு?
எட்டுமோ நாக லிங்கம்? ஏற்றுமோ தீப சோதி?
தட்டுமோ பளிங்கு மேடை தனையறி யார்க்கு நெஞ்சே!

ஒரு பதந் தன்னைத் தூக்கி ஒருபதந் தன்னை மாற்றி
இருபதம் ஆடு கின்ற இயல்பு நீ அறிந்தா யானால்
குருபத மென்று கூறுங் குறிப்புனக் குள்ளே யாச்சு
வருபத நாகை நாதர் மலரடி காண்பாய் நெஞ்சே!

நாடென்றும் நகர மென்றும் நலந்திகழ் வாழ்வ தென்றும்
வீடென்றும் மனையா ளென்றும் மிக்கதோர் மைந்தர் என்றும்
மாடென்றுஞ் சம்பத் தென்றும் வாஞ்சைகொண் டலைந்தாய் இந்தக்
கூடொன்றும் அழிந்தாற் கூடத் தொடருமோ கூறு நெஞ்சே!

ஏட்டிலே எழுதும் நூல்கள் எத்தனை படித்தும் நீதான்
காட்டிலே எறிந்த திங்கள் கானலிற் சலம்போலானாய்;
நாட்டிலே தெய்வ மென்ற நடந்தலை யாம லுன்றன்
கூட்டினில் நாகை நாதர் குறிப்பறிந் துணர்வாய் நெஞ்சே!

நற்பிடி சோறு வைத்தால் நாயனென் றறிந்து கொண்டு
சொற்படி பின்னே ஓடுஞ் சுணங்குன்போற் குணமுண் டாகி
விற்பிடித் தடிக்கப் பெற்ற விமலனார் கமல பாதம்
பிற்பிடி பிடித்து நாகை நாதரைக் காண்பாய் நெஞ்சே!

விரகநா யகனைத் தேடி விரும்பிய மங்கைய போலக்
குரவனா ருபதே சத்தைக் குறிப்புடன் நிதமுந் தேடி
இரவுடன் பகலு மான இருபத நடனங் கண்டால்
சிரமமதில் நாகை நாதர் சிலம்பொலி கேட்கும் நெஞ்சே!

வாரணன் அயன்மால் ருத்ரன் மகேசுரன் சதா சிவன்றன்
காரண மாறு வீட்டிற் கலந்தவ ரிருக்கும் அப்பால்
பூரண நிராதா ரத்தின் புதுமையுங் கண்டு போற்றி
ஆரண நாகை நாதர் அடியிணை தொழுவாய் நெஞ்சே!

மோரிலே நீரை விட்டால் முறிந்திடும் கொள்கை போலக்
காரிய குருவை வீட்டுக் காரண குருவைக் கண்டு
சீரிய சாலு நீர்போற் சேர்ந்திரு வருமொன் றாகி
ஆரிய நாகை நாதர் அடிபணிந் தேத்து நெஞ்சே!

நித்திரை வந்த போது நினைவுதா னிருந்த தெங்கே?
புத்திரர் தாமு மெங்கே? புணர்ந்திடும் மனைவி எங்கே?
பத்திர பூசை எங்கே? பலதொழில் செய்வ தெங்கே?
சிற்பர நாகை நாதர் செயலினை அறிவாய் நெஞ்சே!

வேடத்தைத் தரித்தா லென்ன? வெண்பொடி யணிந்தா லென்ன?
நாடொத்து வாழ்ந்தா லென்ன? நதிதலங் கண்டா லென்ன?
தேடொத்த நாகை நாதர் சீரடி சிந்தை தேர்ந்தே
ஓடைத்தா மரையின் பூப்போல் உயர்வர்நற் பெரியோர் நெஞ்சே!

தள்ளிடு சுணங்கன் போலச் சாத்திரம் படித்தா லென்ன?
வெள்ளிய துகிலைக்காவி வேட்டியாய்த் தரித்தா லென்ன?
உள்ளிருந் தாட்டு விக்கும் ஒருவனை உருகித் தேடித்
தெள்ளியல் நாகை நாதர் செயல்காணார் மாந்தர் நெஞ்சே!

பளிங்குற்ற குளத்து நீரைப் பாசிதான் மறைத்தாற் போலக்
களங்கற்ற புத்தி தன்னைக் காமந்தான் மூடிக் கொண்டு
விளங்கத்தான் செய்வ தில்லை; மெய்யறி விளக்கை யேற்றி
முழங்கத்தான் நாகை நாதர் முழுமொழி பகர்வாய் நெஞ்சே!

மண்ணதை எடுத்து நீரால் வகையுடன் பிசைந்து பாண்டம்
பண்ணியே கனலாற் சுட்டுப் பாதையென் பதுதான் விட்டே
அண்ணலார் வாய்வா காச மடைந்தவைம் பூதக் கூட்டை
விண்ணமால் நாகை நாதர் விளையாட்டென் றறிவாய் நெஞ்சே!

கண்ணாடி தன்னிற் றோற்றுங் காரண உருவம் போல
உண்ணாடி மூலா தாரத் துதித்தசற் குருவைக் கண்டு
விண்ணாடி வெளியைப் பாத்து விளக்கொளி மருகை சேர்த்தால்
மண்ணாடு நாகை நாதர் வந்துனை ஆள்வார் நெஞ்சே!

உருவமும் நிழலும் போல உகந்துபின் றொடரும் நாயன்
பருவங்கண் டறிந்தி டாமற் பருந்தின்காற் பட்சி யானால்;
புருவனை நடுவ ணைக்குப் பொருந்திய நடனங் கண்டால்
குருபர நாகை நாதர் கூப்பிட வருவார் நெஞ்சே!

கணக்கிலா எழுவ கைக்குட் கலந்தரு எடுத்த இந்நாள்
பிணக்கிலா நரசென் மந்தன் பிறப்பதே அரிதென் றெண்ணிக்
குணக்கிலாக் குணமுண் டாகிக் கோதிலா ஞானம் போற்றி
இணக்கிலா நாகை நாதர் இணையடி சேர்வாய் நெஞ்சே!

அரியதோர் நரசன் மந்தன் அவனியிற் பிறந்து பின்னாள்
பெரியபே ரின்ப ஞானம் பெறுவதே யரிதென் றெண்ணி
உரியவே தாந்தத் தன்மை உரைக்குமா சானைப் போற்றித்
தெரியொணா நாகைநாதர் சீர்ப்பதந் தேடு நெஞ்சே!

பசும்பொனின் நாம மொன்றிற் பணிதிவே றானாற் போலே
விசும்பெலாங் கலந்த சோதி வெவ்வேறு தெய்வ மாகி
உசும்பூசீ வாத்து மாக்கள் உடம்பல வான தன்மை
கசிந்துகண் டுருகி நாகை லிங்கரைக் காண்பாய் நெஞ்சே!

விண்டவர் கண்ட தில்லை; விட்டதோர் குறைமெய்ஞ் ஞானம்
கண்டவர் விண்ட தில்லை; சுகனவம் பலத்தின் காட்சி
அண்டர்கோ டஞ்சை யீசன் அடியிணை வாசி யுச்சி
மண்டல நாகை நாதர் வாழ்பதி வழிபார் நெஞ்சே!

காதுடன் நாக்கு மூக்கு கண்ணுயிர் சிரங் கருத்து
மாதுட னீச னாடு மலர்ப்பதம் அறிந்தி டாமல்
வாதுசொற் றர்க்க நூல்கள் வகைபல வடித்தா லென்ன?
சாதுவாய் நாகை நாதர் தாள்கண்டு தனைப்பார் நெஞ்சே!
தீபத்தை மலரென் றெண்ணிச் சென்றிடு விட்டில் போலக்
கோபத்தின் கனலில் வீழ்ந்து கொடியதோர் பிறவி பெற்றாய்;
ஆபத்து வந்தா லுன்னோ டியாவர் தாம் வருவார்? அந்தக்
கோபத்தை மறந்து நாகை லிங்கரைத் தொழுவாய் நெஞ்சே!

மின்மினிப் பூச்சி தன்னுள் மெய்யொளி கண்டாற் போல
உன்மன மொடுங்கி யேயுன் உள்ளொளி கண்டாற் பின்னைச்
சென்மமு மில்லை; அந்தச் சிவத்துள்ளே சேர்வாய்; நாளும்
பொன்மகள் புகழும் நாகை நாதரைப் போற்று நெஞ்சே!

செம்பினிற் களிம்பு போலச் சீவனுஞ் சடமுங் கூடி
நம்பின உடலைக் கண்டு நல்லயிர் வடிவங் காணாய்;
வெம்பிய காம மாயை விட்டு மெய்ப் பொருளைத் தேடிக்
கும்பிய நாகை நாதர் கூத்தாடல் காண்பாய் நெஞ்சே!

இலவுகாத் திருந்த பட்சி ஏங்கியே பறக்கு மாபோல்
உலகமே பொருளாய் நம்பி ஒருபலன் அற்றாய் நீதான்;
தலைமையாங் குருவைப் போற்றித் தாளிணை வாசி கண்டால்
நிலைமையாம் நாகை நாதர் நின்னிடை நிற்பார் நெஞ்சே!

ஆத்தும லிங்கங் கண்டுள் அன்பெனும் மலரை நன்றாய்ச்
சார்த்தியே பிரண வத்தாற் றனிப்பெறு வட்டஞ் சூட்டிப்
போற்றியே தீப மூலப் புரிசுடர் விளக்கும் பார்த்துப்
போற்றியே நாகை நாதர் பொன்னடி பூசி நெஞ்சே!

சுக்கில விந்து தானுஞ் சுரோணிதக் கருவிற் கூடிப்
பக்குவக் குழவி யாகிப் பையுளே அடைந்த பாவை
அக்குவை யதையே விட்டிங் கவனியிற் பிறந்த சூட்சம்
அக்கினி நாகை நாதர் அமைத்ததென் றறிவாய் நெஞ்சே

நீக்கமில் லாம லெங்கும் நிறைந்ததோர் வெளியை யுன்னுள்
தாக்கியே அறிவி னாலே தனைமறந் திருந்து பார்வை
நோக்கியே நிட்டை கூடி நொடியரை நிமிடம் வாங்கித்
தூக்கியே நாத நாகை நாதரைத் தொழுவாய் நெஞ்சே!